உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சஉ.] தாரண-ஹு மாசி-மீ [பகுதி—ச.
Vol. 42. February—March 1945. No. 4.

### உள்ளுறை.



| | | |
|---|---|---|
| வாழ்க்கையும் விஞ்ஞானமும்:- | ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L. | சக—ருo |
| திருக்குற்றாலத்தலபுராண இன்கவி விளக்கம்:- | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. | ருக—ருரு |
| மதிப்புரை:— ... | ... ... ... | ருசு |
| பண்டைத்தமிழர்:— | சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர் | ருஎ—சுo |



பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1945.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—சஉ.] தாரண-ஹு மாசிமீ [பகுதி—ச.
Vol. 42. February-March 1945. No. 4.

## வாழ்க்கையும் விஞ்ஞானமும்*

ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.

[௬உ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### விஞ்ஞானமும் மதமும்

விஞ்ஞானமும் மதமும் ஒன்றுக்கொன்று பகை என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு. இரண்டுக்கும் சில வேற்றுமைகள் உண்டு. இரண்டையும் ஒன்றாக ஒப்பிட்டுப் பார்ப்பதற்குரிய பொது அளவுகோல் ஒன்றும் கிடையாது. விளக்கின் ஒளியையும், பூவின் மணத்தையும், உணவின் சுவையையும், இசையின் தன்மையையும் பொதுப்படச் சீர்தூக்க இயலாததுபோலவே இவ்விரண்டுக்கும் உள்ள தாரதம்மியத்தையும் ஒரே அளவுக்கருவியால் சீர்தூக்க இயலாது.

விஞ்ஞானம் பகிரங்கமானது; நேரிலேகண்ட விஷயங்களை விவரிப்பது; இந்திரியங்களுக்கு எட்டா மூலகாரணங்களைத் தனக்குரிய விஷயமாகக் கொள்ளாதது. மதமோவெனில் அந்தரங்கமானது; மறைவானது; இந்திரியங்களுக்குப் புறம்பானவையும் உண்டு எனக் கருதி அவற்றை விளக்கமுயலுவது. சாதாரணமாக, மக்களின் மனத்திலே மதவுணர்ச்சி தோன்றுவதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் உண்டு. பிராணதாரப் போராட்டத்தில் ஈடுபட்ட

* மயிலைத்தமிழ்ச்சங்கத்திற்செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியது.

மனிதன் தன்னிலும் பலம் மிகுந்த உயிர்ப்பிராணிகளைவென்று, வசப்படுத்தி அடக்கியாளத்தெரிந்துகொண்டான். இயற்கையையும் தனக்கு அடிமையாக இருந்து குற்றேவல்புரியப் பெரும்பாலும் பழக்கிவிட்டான். ஆயினும், பல வேளைகளில், அவன் எவ்வளவு முயன்றாலும் அவனுடைய முயற்சி கைகூடுவதில்லை. துன்பத்துக்கும் நோய்க்கும் உள்ளாகி அவன் மிகவும் வருந்தநேருகிறது. அப்போதெல்லாம் வேறோர் கதியுமின்றித் தன்னினும் மேம்பட்ட சக்தியுள்ள தெய்வங்களைப் போற்றி, அவைகளை வாயார மனமார வாழ்த்தி, அவைகளுக்குக் காணிக்கைகள்முதலியவற்றைச்செலுத்துவதாக வேண்டிக்கொண்டு, அவைகளை மகிழ்விக்க முயலுகிறான். அவனுடைய மனத்திலே மதவுணர்ச்சி உதயமாகிறது. வாழ்க்கைப்போராட்டத்தில்நிகழும் தோல்வியால் அவனுடைய மனத்திலே மதமானது கிளைத்தோங்குகிறது.

வேறொருவழியாலும் மதவுணர்ச்சி தோன்றுவதுண்டு. பனிக்கிரீடம் அணிந்த இமயமலையைக் கண்ணுற்றவர் அனைவரும் அதன் அழகிலே ஈடுபடுகிறார்கள். அதற்குத் தம் மனத்தைப் பறிகொடுக்கிறார்கள். அதன் பெருமையானது மேன்மேலும் அவர்களைத் திகைப்படையச்செய்கிறது. பர்வதராஜனாக விளங்கும் இமயமலையின் மகோன்னதமான சிகரத்தைக் கண்டு, 'இத்தனை உயர்வுடைய இது நம்மினும் சிறந்தது. ஆதலால் இது ஒரு தெய்வமாக இருக்க வேண்டும்' என்று அவர்கள் அஞ்சி உறுதிகொள்கிறார்கள்.* இதனால் மதவுணர்ச்சி உண்டாகிறது.

இனி, மூன்றாவதாக, விஞ்ஞானம் காரணமாகவும் மதவுணர்ச்சி தோன்றக்கூடும். இயற்கையானது மனிதனைநோக்கி 'முயல், அநுபவி, சிந்தி' என்று ஓயாது தூண்டிக்கொண்டேயிருக்கிறது. இயற்கை என்பது ஒரு விடுகவிக் களஞ்சியம்; விஞ்ஞானங்கள் என்பன யாவும் விடைகள். ஆயினும் இத்துணை வளர்ச்சிபெற்ற விஞ்ஞானங்களாலும் அறியமுடியா விஷயங்களும், விள்ளமுடியாப் புதிர்களும் எண்ணிறந்தன இன்னும் இருக்கின்றன.

*'Nature is at times so overpowering in its beauty or awesomeness, that we feel it too big for humanity'—(J. A THOMSON.)

விஞ்ஞானத்துறையில் முயன்று முயன்று, அடியும் முடியும் தெரிய முடியாது தத்தளிக்கும் நிலையில், மனிதனுடைய மனத்தில் மத வுணர்ச்சி வேரூன்றுகிறது. மதம் ஒன்றே அவனுக்கு ஆறுதல் அளிக்கிறது. முதன்முதலில் அறியாமையினால் ஒரு வியப்புத் தோன்றுகிறது. பிறகு அறிவு உதயமாகி வளர்கிறது. அறிவின் எல்லையை எட்டியதும் இறுதியிலும் வியப்பினால் வணக்கமும் தெய்வபக்தியும் தோன்றுகின்றன. *

ஆகவே, வாழ்க்கையிலே பயனில்லாத முயற்சியாலும், இயற்கைக்காட்சியால் உண்டாகும் மனவெழுச்சியாலும், அறிவு-வரம்பையடைந்த நிலையிலும் மதவுணர்ச்சி மனத்தில் உதய மாகிறது. இக்காரணங்களைத் தவிர வேறு காரணங்களாலும் மத வுணர்ச்சி தோன்றக்கூடும். நீதிமார்க்கங்களிலே காணும் முரண்பாடு களால் உண்டாகும் சஞ்சலங்களாலும், அவதாரபுருஷர்கள் என்று நாம் நினைக்குமாறு நம் மனத்தைக் கொள்ளைகொள்ளும் பெரியார் களின் வாழ்க்கை போதனை முதலியவற்றாலும் மதவுணர்ச்சி உண் டாவதும் உண்டு.

விஞ்ஞானத்துக்கும் மதத்துக்கும் பகையில்லையெனினும் அவ்விரண்டுக்கும் வேற்றுமையிருப்பதாகச் சில காரணங்களை முன்னிட்டுக் கூறுகிறார்கள். அவற்றை இங்கே குறிப்பிடலா மென்று நினைக்கிறேன்.

முதலாவது: மதம் என்பது பல கொள்கைகளின்—நம்பிக் கைகளின்—தொகுதி. இவற்றுள் நாம் வெகுகாலமாக நம்பிவந் தவை சில நவீன விஞ்ஞான அறிவின் முடிவுகளோடு ஒவ்வாமற் போவதுண்டு. இதிலிருந்து நம்முடைய மதத்துக்கும் விஞ்ஞானத் துக்கும் பகை என்று கருதலாகாது. உதாரணமாக, கலிலேயோ வைக் கிறிஸ்தவப் பாதிரிகள் மிகவும் துன்புறுத்தி, அவர் கண்டு பிடித்த உண்மைகளையெல்லாம் அவர் தம் வாயாலேயே

* "All knowledge begins and ends with wonder, but the first wonder is the child of ignorance; the second wonder is the parent of adoration"—(COLERIDGE)

மறக்கும்படி செய்தார்கள். அவ்வுண்மைகள் நிலைத்துவிட்டால் மதம் தொலைந்துவிடும் என்பது அவர்களுடைய எண்ணம். கலிலேயோ எடுத்துக்கூறிய உண்மைகள்யாவும் பிற்காலத்திலே நிலைநின்றன: ஆனால் இன்றளவும் கிறிஸ்தவமதம் அழிந்துபோக வில்லை; அந்தக் காரணத்தால் அழிந்தும்போகாது.

இரண்டாவதாக, மதநூல்களிற் கூறப்படும் சிற்சில கொள்கை களையும் புதியவாகக் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானக்கொள்கை களையும் ஒன்றாகக் கலந்து பின்னி, ஒரே கயிறாக முறுக்கப் பலர் முயலுகிறார்கள். இம் முயற்சி பெரும்பாலும் கைகூடாததுகண்டு, இவ்விரண்டும் ஒன்றோடொன்று முரண்பாடுடையவை என்கிறார் கள்.

மூன்றாவதாக, மதமானது தனக்கு உரிய எல்லையைக்கடந்து பிற துறைகளிற் புகுவதுபோலவே, விஞ்ஞானிகளும், சிற்சில வேளைகளில், விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் புறம்பானவையாயும் அறிதற்கியலாதவையாயும் உள்ள விஷயங்களில் தலையிடுவதுண்டு. அவர்கள் இவற்றைப்பற்றி வெளியிடும் விஷயங்களை அவர்க ளுடைய அபிப்பிராயம் என்றேனும், கோட்பாடு என்றேனும் கருது வது முறையாகுமேதவிர, இவற்றை விஞ்ஞானம் கூறிய முடிவு என்று கூறுவது பொருந்தாது. ஆதலால் அவர்கள் கொண்டுள்ள சிற்சில நவீன நம்பிக்கைகளுக்கும் மதத்தையொட்டிய நம்பிக்கை களுக்கும் உள்ள முரண்பாட்டை விஞ்ஞானத்துக்கும் மதத்துக் கும் உள்ள முரண்பாடாகக் கருதலாகாது.

நான்காவதாக, மதசம்பந்தமானவை என்று கருதப்படும் சிற் சில நம்பிக்கைகளையும், செயல்களையும், நிகழ்ச்சிகளையும் விஞ் ஞானிகள் சிற்சில வேளைகளில் தமது ஆராய்ச்சிக்குரிய விஷயங்க ளாக்குகிறார்கள். இவ்வாறு அவர்கள் ஆராயப்புகுவது மதத்தின் கௌரவத்தைக் குறைப்பதாகச் சில மதாபிமானிகள் கருது கிறார்கள். இம் மனநிலைகாரணமாக இவர்களுக்கு விஞ்ஞானிகளின் மேல் உண்டாகும் வெறுப்பை விஞ்ஞானத்துக்கும் மதத்துக்கும் உள்ள வெறுப்பாகக் கூறுகிறார்கள். இதுவும் தவறு.

ஆனால், ஆராய்ச்சிபூர்வமான விஞ்ஞான-மனநிலை வேறு, பக்தி பூர்வமான மதமனநிலை வேறு என்பதைப்பற்றிச் சந்தேகமில்லை. இருட்டறையிலே குட்டிச்சாத்தான் வாழ்கிறது என்று உறுதியாக நம்பும் பக்தன், இருட்டில் என்ன இருக்கிறது என்று காணும் பொருட்டுப் பிரகாசமான விளக்கைக் கையிலேந்திச் சோதிக்கமுயலும் விஞ்ஞானியாக இருப்பது துர்லபம்: சாத்தியமில்லை யென்றே சொல்லலாம். மூடபக்திக்கும் அறிவாகிய விஞ்ஞானத்துக்கும் பகை; மெய்தான். ஆனால் அறிவோடொத்த மதவுணர்ச்சி இருக்கக்கூடும், இருக்கவும் செய்கிறது—அறிவோடொத்த கவிகற்பனை இருப்பதுபோல. அறிவிலியின் தெய்வம் பூச்சாண்டி; அறிவாளியின் தெய்வமோவெனில் "உலகம் யாவையும் தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும்" உடைய பரம்பொருள்.

---

## அரசியலும் விஞ்ஞானமும்

நம்மைச்சூழவுள்ள அரசியல்-உலகத்திலே காணப்படும் கக்ஷிப் பிரதிகக்ஷிகளைக் கவனித்தால் எத்துணை மனக்குழப்பம் இருக்கிறதென்பது தெரியவரும். உலகமெங்கும் சமூகம் சீர்கெட்டுவிட்டது; மக்கள் துயருற்று வருந்துகிறார்கள் என்பதைப்பற்றி யாதொரு அபிப்பிராயபேதமும் இல்லை. ஆனால் இந்நிலைக்குக் காரணம் என்ன? என்பதைப்பற்றிப் பலவகைப்பட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பல ஒன்றுக்கொன்று நேர்மாறானவை. ஜனநாயக ஆட்சி வலிமையற்றது; அது ஒன்றுக்கும் உதவாதது என்று குறைகூறுகின்றனர் ஒரு சாரார். சர்வாதிகார-ஆட்சி ராக்ஷஸ பலம் உடையது; தீமையே வடிவமானது; அதிலிருந்து நன்மையை எதிர்பார்க்கலாகாது என்கிறார் மறுசாரார். சில வல்லரசுகள் ஆயுத பலத்தைத் தமக்குவேண்டிய அளவு திரட்டிக்கொள்ளாது அஜாக்கிரதையாக இருந்துவிட்டன; ஆகையால் உலகத்துக்குக் கேடு வந்தது என்கிறது ஒரு கக்ஷி. சிலநாடுகள் போர்க்கருவிகளைத் திரட்டியபடியாலேதான் உலகத்துக்கு அபாயம்விளைந்தது என்கிறது எதிர்க்கக்ஷி. ஏற்றுமதி இறக்குமதிகளின்பேரிலும், விளைபொருள்கள் செயற்கைப்பொருள்களின் பேரிலும் தக்கபடி வரிகள்

விதித்துத் தடைசெய்யாததாலேதான் வந்தது கஷ்டம் என்கிறார்கள் சிலர். அவரவர்கள் இஷ்டம்போல் வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றைச் செய்யவிடாமல் அநியாயமாய் வரிகள் விதித்துத் தடைசெய்தபடியால் இத்தனைகஷ்டமும் ஏற்பட்டது என்கிறார்கள் வேறு சிலர். தெய்வபக்தி ஒழிந்துவிட்டது; பாவபுண்ணியங்களுக்குப் பயமில்லாமற்போய்விட்டது; அதனால்தான் உலகம் க்ஷீணித்துவிட்டது என்கிறார்கள் ஒரு கூட்டத்தார். இவ்வுலகவாழ்க்கையைக் கவனியாமல் மறுஉலகத்திலேயே நினைவைச்செலுத்திப் பூச்சாண்டிகளுக்குப் பயந்து நடுங்கி ஒடுங்கிவந்ததால் மனோதிடமே குன்றிவிட்டது என்று மறுக்கிறார்கள் மற்றொரு கூட்டத்தார். விவசாயம் மேல் என்கிறார் ஒரு சாரார்: அன்று, கைத்தொழிலே மேல் என்கிறார் மறுசாரார். இவற்றால் அரசியற்றுறையில்—முறைகளிலும் கொள்கைகளிலும் செய்கைகளிலும்—வேறுபாடுகளும் குறைபாடுகளும் பல காணப்படுகின்றன. இவற்றுள் அகப்பட்ட சமூகம் முன்னேறமுடியாமல் தத்தளிக்கிறது. ஒவ்வொரு கக்ஷியிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. இவற்றை ஆராய்ந்து நாட்டை முன்னேறச் செய்வது எப்படி? யார்?

ஒவ்வொருநாட்டிலும் ஒரு பெரும் பிளவு காணப்படுகிறது. ஆராய்ச்சிசெய்யும் விஞ்ஞானிகள் வேறு; அதிகாரம் செலுத்தும் அரசியல்வாதிகள் வேறு என்று அறிவாளிகள் பிளவுபட்டிருக்கக் காண்கிறோம். ஓரிடத்திலும் ஆராய்ச்சியும் அதிகாரமும் ஒன்றுபடவில்லை. தன் ஆயுள் முழுவதும் முயன்று, வாழ்க்கையின் நியமம் ஏதாவதொன்றின் உண்மையை ஒரு விஞ்ஞானி கண்டுபிடிக்கிறான். அவன் தேடியறிந்த உண்மையை உலகம் கவனிப்பதில்லை. அவன் காட்டிய வழியிலே உலகம் நடப்பதில்லை. அவனுடைய முயற்சி முழுவதும் வீணாகிறது. அரசியல்-ஞானி தன் ஆயுள் முழுவதும் பிறரோடு போராடி, முயன்று, உயர்ந்த அதிகாரநிலையை அடைகிறான். ஆனால் சமூகத்துக்கு நன்றாகப் பயன் அளிக்கும் வழிகளில் அந்த அதிகாரத்தைச் செலுத்துவதற்குப் போதிய விஷயஞானம் அவனுக்கு இல்லாதபடியால் அவனுடைய அதிகார சக்தி சிதறிப்போய்த் தவறானவழிகளிற் செலுத்தப்பட்டு வீண்

ஆகிறது. அரசியல் அதிகாரிகள் தக்கவாறு இன்னும் விஞ்ஞானிகளைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை; அவர்களுடையசொல்லுக்குப் போதிய மதிப்பை இன்னும் அளிக்கவில்லை என்று பொதுவாகக் கூறலாம்.

இதிலிருந்து ஒரு சந்தேகம் எழலாம். வாழ்க்கைப் பிரசினைகளைத் தீர்க்கவல்லவர்கள் விஞ்ஞானிகள்மட்டுந்தான் என்று முடிந்துவிட்டால்——மனோதத்துவசாஸ்திர அறிஞர்களும் பொருளாதார சாஸ்திர அறிஞர்களும் ஜீவதத்துவசாஸ்திர அறிஞர்களுமாகச் சேர்ந்து ஆர அமர ஆலோசித்துச் சோதித்து ஆராய்ந்துகட்டும் முடிவுகளையே சமூகம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று ஆகிவிட்டால்—இவர்களும் சர்வாதிகாரிகளாய்விடுவார்களன்றோ? சுதந்திரத்தை நாடும் மக்கள் தம்முடைய அறிவைப் புறக்கணித்து, இவர்களுடைய அறிவுக்கும் அதிகாரத்துக்கும் அடிமைகளாகி எப்படி வாழமுடியும்? அது சிறந்த வாழ்க்கையாகுமா? அடிமை அடிமைதானே! அதிகாரத்துக்கு அடிமையானல் என்ன? அறிவுக்கு அடிமையானல் என்ன? —என்று கேட்கலாம்.

ஆனல் உண்மையில் இம்மாதிரியான ஆபத்து ஒன்றும் வந்துவிடாது. பெரும்பான்மையும் உண்மைவிஞ்ஞானி அரசியற்றுறையில் ஈடுபடச் சம்மதிப்பது துர்லபம். ஏனென்றால் உண்மை விஞ்ஞானி தன்னுடைய மனம் முழுவதையும் ஆராய்ச்சிக்கே பறிகொடுத்தவன்; அதற்கே அர்ப்பணம்செய்தவன். வனத்தில் வாழ்ந்துவந்த முனிவர்கள் உலகசிந்தனையின்றித் தவத்தில் ஈடுபட்டு அரசாங்கவிஷயங்களிலே தலையிடாமல் ஒதுங்கி வாழ்ந்ததாகக் கூறப்படுவதுபோல், அவனும் உலகவாழ்க்கையின் போராட்டங்களிற் புக மனம் இல்லாதவன். அவனுக்குள்ள திறமைகள் காரணமாகவும் குறைபாடுகள் காரணமாகவும் அவன் அரசியற்றுறையில் முழுதும் ஈடுபட்டு அதிகாரம் வகிக்க ஓரளவு தகுதியற்றவன். கூரிய புத்தியும், நுண்ணிய முறைகளால் தர்க்கரீதியில் விஷயங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து வெளியிடும் திறமையும், பக்ஷபாதமின்றிச் சோதித்து முடிவுகட்டுதற்குரிய மனப்பான்மையும் அவனுக்குள்ள

குணங்கள். கூட்டத்தைக்கண்டவுடன்கூசி ஒதுங்கும் இயல்பும், உலகம் பெரிதெனப் போற்றி மதிக்கும் செல்வத்துக்கும் அவன் பெரிதெனப்போற்றும் உண்மைக்கும் உள்ள வேறுபாட்டினால் அவன் மனத்திலே தோன்றும் வெறுப்பும், சிற்சில விஷயங்களையே நுணுக்கமாக ஊன்றி ஆராய்வதால் மற்றெல்லா விஷயங்களோடும் அவற்றைப் பொருத்தி அவையாவற்றையும் ஒருங்கு சேர்த்து முறையாகப் பார்க்கவல்ல திறமைக்குறைவும் அவனுக்குள்ள தோஷங்கள். விஞ்ஞானிமட்டிலும் தனியாக அரசியல் அதிகாரம் வகிப்பது பொருந்தாது.

ஆதலால் விஞ்ஞானியும் அரசியல்ஞானியும் கைகோத்து உழைக்கவேண்டும். அப்படி உழைத்தாலன்றிச் சமூகம் முன்னேற்றம் அடையாது. அரசியல்ஞானி போதிய அளவு விஞ்ஞான அறிவையும் விஞ்ஞானமனநிலையையும் பெற்றவனாயிருக்கவேண்டும். விஞ்ஞானியும் ஓரளவு சமூகவாழ்க்கையில் ஈடுபட்டவனாய், அதன் சுகதுக்கங்களைப்பற்றிச் சிந்திப்பவனாய் இருக்கவேண்டும். இப்படிப் பட்ட விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் ஒத்துழைத்தால் வறுமையும் நோயும் பஞ்சமும் போருமே ஒழிந்துவிடும்.*

---

[* The scientific temper in politics would banish the fanaticism and arrogance of party zealots, transforming the blaze of passionate propaganda into a cool grotto where people would humbly investigate economic facts and social conditions; it would render the politician sufficiently uncertain about his own conclusions to respect the honest convictions of those with whom he differs. ......what I suggest and lament is that men whose scientific detachment and superior knowledge fit them so admirably for public service should be debarred from putting their whole energy at the disposal of the community.

—The Earl of Listowel
'Human Affairs']

இவ்வாறான மனநிலைபடைத்த அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் அரசியலை ஒப்புவிக்கும்பொறுப்பு நாட்டு மக்களைச்சேர்ந்தது. நாட்டு ஜனங்கள் தங்களுடைய மனத்தைப் பண்படுத்திக்கொண்டாலன்றிச் சீரியமனமுடையவர்களை அவர்களால் தேர்ந்தெடுக்க இயலாது. நாட்டின் வளர்ச்சிக்குத் தேசபக்தி இன்றியமையாதது. எனினும் தேசபக்திமட்டிலும் இருந்தாற் போதாது. தேசபக்தியோடு மூடபக்தி சேர்ந்துவிட்டாலோ தேசத்துக்குப் பேராபத்து விளைந்துவிடும். ஜாதி, மதம், பாஷை, வயது, செல்வநிலை முதலியவற்றைப் பொருட்படுத்தாது, தக்க திறமையுடையவர்களையே ஜனங்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். வீணான ஆரவாரமொழிகளாலும், தாற்காலிகமான கோபதாபங்களாலும், குறுகிய லக்ஷியங்களிலுள்ள பற்றுக்களினாலும் மயங்கித் தம்நிலை தவறலாகாது. ஆதலால் ஒவ்வொருவனும் இயன்ற அளவு விஞ்ஞான மனநிலையைப் பெறமுயலவேண்டும். விஞ்ஞானம் இயற்றித் தரும் எண்ணிறந்த பொருட்செல்வங்களைக்காட்டிலும் விஞ்ஞானத்தை ஊன்றிப்படிப்பதால் நாளடைவில் தானாகவே அமைந்துவரும் இம்மனநிலையானது சிறந்தது என்று முன்னமே குறிப்பிடப்பட்டது. இந்நிலையைப் பொதுமக்கள் பெறுவார்களானால் ஜனசமுதாயம் முன்னேற்றம் அடைவது உறுதி.

அரசியற்றுறையின் பகுதிகளாகவுள்ள பொருளாதாரம், சுகாதாரம், வைத்தியம், விவசாயம், உணவுப்பொருள், கல்வி, கைத்தொழில், சிற்பம், சட்டம் முதலிய ஒவ்வொரு பகுதியிலும் தக்க விஞ்ஞானிகளைக்கொண்டு மேன்மேலும் சீர்திருத்தங்களை அமைக்கவேண்டும்; ஜனசமுதாயத்தின் நன்மை ஒன்றையே கருதி நிர்வாகத்தை நடத்தவேண்டும். இவற்றுள் சில பகுதிகளைப்பற்றி மிகச் சுருக்கமாக இங்கே குறிப்பிடுகிறேன்.

நமது நாட்டிலே பிளேகும், க்ஷயமும், டைபாய்டும், காலராவும், மலேரியாவும், வைசூரியும் இன்னும் பிற தொற்றுநோய்களும் லக்ஷக்கணக்கான உயிர்களை வருஷந்தோறும் கொள்ளைகொள்கின்றன. அற்பக்கொசுவினாற் பரவிவரும் மலேரியாவின் கொடியசக்தியை நாம் இன்னும் நன்றாக உணர்ந்துகொள்ளவில்லை. கிரேக்கசாம்ராஜ்யமும், ரோமசாம்ராஜ்யமும் அழிந்துபோனதற்கு அதுவே முக்கிய காரணம். இந்தோ—சைன நாகரிகமும், மாயா நாகரிகமும் அடி

யோடு தொலைந்துபோனதற்கும் அதுவே முதற் காரணம். கொசு வைத்தொலைத்தால் மலேரியாவும், பைலேரியாவும், மஞ்சள்சுரமும், கொசுவினால் பரவிவரும் வேறு சில நோய்களும் ஜனசமுதாயத்தைச் சீர்குலைக்க இடமிராது. உணவுப்பொருளும் குடிதண்ணீரும் தூயவையாயிருந்தால் டைபாய்டும் காலராவும் தோன்றமுடியாது. அமெரிக்காவிலே சில மாகாணங்களிற் பல வருஷங்களாக ஒருவர்கூட இந்நோய்களாற் பீடிக்கப்படுவதில்லையாம். ஜெர்மனியில் வைசூரி கிடையாது. நமது நாட்டினர் நோயற்று வாழவேண்டுமெனக் கருதுவோர் மேற்கூறிய நாடுகளிற் பின்பற்றிய முறைகளைத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்வது அவசியம்.

"இந்தியநாட்டுமக்களுள் தமிழ்நாட்டுமக்களே உடல்வலி குன்றியவர்கள்; அவர்கள் உண்ணும் உணவின் குறைபாடுகளே இதற்குக் காரணம்" என்று இவ்விஷயத்தை ஆராய்ந்த அறிவாளிகள் கூறுகிறார்கள். விஞ்ஞானிகளின் உதவியால் இக்குறைபாடுகளை அகற்றி, வாய்க்கு ருசியுள்ளதாயும் உடலுக்கு ஆரோக்கியமுள்ளதாயும் இருக்கும் ஆகாரவகைகளைத்தேடி அமைப்பதும் ஓர் இன்றியமையாதகாரியம்.

வேண்டாப் புழு பூச்சி முதலிய பிராணிகள் ஒவ்வொரு வருஷத்திலும் நமது கிராமப்பயிர்களிலே பத்தில் ஒரு பகுதியையும் தோட்டப்பயிர்களிலும் பழவகைகளிலும் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கையும் தின்றோ, அழித்தோ நமக்குப் பயன்படாமற் பாழாக்கிவிடுகின்றன. விஞ்ஞானமுறைகளைத் தெரிந்து கையாண்டால் இச்சேதத்திற் பெரும்பகுதியைத் தடுக்கக்கூடும்.

இவ்வாறே மற்றொவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் விஞ்ஞானிகள் இயற்றித்தரக்கூடிய உதவி அதிகமாக உள்ளது. ஒவ்வொரு துறையிலும் அவர்களுடைய அறிவையும், ஆராய்ச்சியையும், நடுநிலைமையிலுள்ள மனத்தையும் பயன்படுத்திச் சமூகத்தை முன்னேற்றமடையச் செய்வது நம்முடைய கடமை.

[தொடரும்.]

உ

# திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்

ராவ்ஸாஹிப் ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C., C.V.D.

## முன்னுரை

'திருக்குற்றாலமென்பது, பாண்டிநாட்டிலே தமிழ்வேதம் பெற்ற பதினான்கு சிவஸ்தலங்களி லொன்று'.* 'செம்பாகக்கவிகள் எங்கும் திகழ்வதாயும், திரிபு யமகம் மடக்கு சிலேடை கற்பனை சமத்காரம் அலங்காரம் ஆகிய பலவகைச் சுவைபொருந்திய கவிகளெல்லாவற்றுக்கும் சிறந்த மாதிரிக்கவிகள் காணப்படுவதாயும் உள்ள ஒரு நூல் உளதோ? உளதேல், அந்நூல் எந்நூலெனின், இந்நூலேயெனத்தக்க(து) திருக்குற்றாலத்தலபுராணம்'.† 'இப்புராணம், தானவைபவகாண்டம், சிவரகசியகாண்டம் என இரு பிரிவும், 32 சருக்கங்களும் 2072 செய்யுட்களும் கொண்டுள்ளது'.‡ 'இந்நூலாசிரியராகிய திரிகூடராஜப்பகவிராஜமூர்த்திகள், பாண்டிவளநாட்டிலே, சித்திராநதியருகிலே, தென்காசிக்கும் திருக்குற்றாலத்துக்கும் இடையிலுள்ள மேலகரம் என்னும் புண்ணிய நகரத்திலே விருந்துபுரந்தந்து அருந்தவர்ப்பேணிச் சிவநேயச்செல்வத்திற் சிறந்துவிளங்கும் சைவவேளாளர்திருமரபிலே இற்றைக்கு இருநூறுவருடங்களுக்குமுன்னர் அவதரித்தருளினர்'.§

---

* திருக்குற்றாலத்தலபுராணம் இரண்டாம்பதிப்பு முகவுரை.

† திருக்குற்றாலக்குறவஞ்சிக் கவிநயம் முன்னுரை (கலைமகள்).

‡ திருக்குற்றாலத்தலபுராணம் இரண்டாம்பதிப்புமுகவுரை.

§ திருக்குற்றாலத்தலபுராணம் 2-ம் பதிப்பு நூலாசிரியர்வரலாறு.

இவரியற்றிய நூல்கள் பின்வருபவை:—

| | | | |
|---|---|---|---|
| 1 | குற்றாலக்குறவஞ்சி | 8 | திருக்குற்றாலப்பரம்பொருள்மாலை |
| 2 | குற்றாலத்தலபுராணம் | 9 | ஷை கோவை |
| 3 | ஷை மாலை | 10 | குழல்வாய்மொழி கலிப்பாமாலை |
| 4 | ஷை சிலேடைவெண்பா | 11 | ஷை கோமளமாலை |
| 5 | ஷை யமகவந்தாதி | 12 | ஷை வெண்பாவந்தாதி |
| 6 | ஷை உலா | 13 | ஷை பிள்ளைத்தமிழ் |
| 7 | ஷை ஊடல் | 14 | நன்னகர்வெண்பா |

மேற்கூறிய நூல்களுள், குற்றாலத்தலபுராணமும் குற்றாலக் குறவஞ்சியும் மூன்றுமுறை அச்சிடப்பட்டிருக்கின்றன. திருக் குற்றாலமாலை, செந்தமிழ்ப்பிரசுரம்—சச ஆக 1921-ம் வருடத்தில் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீ T. K. இராமாநுஜையங்காரவர்களால் அரும்பதவுரையுடன் அச் சிடப்பட்டிருக்கிறது. திருக்குற்றாலச்சிலேடைவெண்பா திருக் குற்றால யமக அந்தாதி, திருக்குற்றாலநாதர் உலா ஆகிய மூன்று நூல்களும் தென்காசி லோகாம்பிகைபிரஸில் 1938-ல் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன.

'ஆரிய திராவிட இலக்கண இலக்கிய *பாராவாரபாரங்கதராக வும், சைவசித்தாந்தஞானபோதகாசிரியதிலகராகவும், சங்கீத ரசிக சிகாமணியாகவும், சாகித்தியசார்வபௌமரான மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை முதலிய சாகித்யவித்துவான்களுக்கும் சங்கீதவித்துவசிரேஷ்டரான மகாவைத்தியநாதையர் முதலிய சங்கீதவித்துவான்களுக்கும் வடமொழிவாணருக்கும் அவரவர் வித்தைத்திறமைக்குத்தக்க பரிசுகள் வழங்கி ஆதரித்துவந்தவராக வும், சைவசமயத்துடன் தமிழ் ஆரியம் சங்கீதம் ஆகிய நான்கையும் தமது அருமைமக்களாகக்கொண்டு தாய்போலப் பேணிவளர்த்த

---

* பாராவாரம் பாரம் கதர் - கடல் (கிளைக்கடந்து அலை) களின் கரையை அடைந்தவர்.

பெருங்கருணை வள்ளலாகவும் விளங்கிய திருவாவடுதுறையாதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்தியின் பூர்வாச்சிரமகுல முதல்வராம் தனிப்பெருமைவாய்ந்த இந்நூலாசிரியரது சிறப்பு, "தக்கார்தகவிலரென்பதவரவர், எச்சத்தாற்காணப்படும்" * என்பதனால் நன்குவிளங்கும்.' †

இந்நூலாசிரியருடைய வழித்தோன்றல்களிலே காலஞ்சென்ற மேலகரம் சொ. சுப்பிரமணியகவிராயர், அருமையான புலமையும் இனிமையான கவித்துவமும் உடையவராய்த் திருநெல்வேலி மதுரைத் திரவியம் தாயுமானவர் ஹிந்துகலாசாலைத்தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்தவரும், மாட்சிமைதங்கிய பிரித்தானிய இளவரசரால் சென்னைமாநகரத்தில் 1922-ம் வருடம் ஜனவரிமீ 13உ கில்லத்து என்னும் பட்டமும் தங்கமெடல் முதலிய பரிசும் அளிக்கப்பெற்றவரும் ஆவர்'.‡

இத்தகைப் பெருமைவாய்ந்த திரிகூடராசப்ப கவிராசமூர்த்திகள் இயற்றிய திருக்குற்றாலத்தலபுராணத்தில் விசேடநயமுடையவைகளாக நான்கண்ட பாடல்களுக்குத் திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம் என்ற தலைப்பின்கீழ் இயன்றமட்டும் விளக்கமான உரை வரையப்படும்.

'குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.'

---

* திருக்குறள்—114.

† குற்றாலக்குறவஞ்சிக் கவிநயம் முன்னுரை (கலைமகளில் வெளியானது).

‡ குற்றாலக்குறவஞ்சி இரண்டாம்பதிப்புமுகவுரை.

## திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்

### காப்பு

புயல்காட்டும் பனிவரையின் பிடிதழவுஞ் சிவவேழம் பொருப்பில் வானில்
இயல்காட்டு மிருபிடிசேர் முந்நாலு துதிக்கையன்முன் னீன்ற ஞானச்
செயல்காட்டு மொருகோட்டி னிருகோட்டு வெண்பிறைவாழ் செக்கர் வானை
மயல்காட்டுந் திருமேனி மழைமதச்சேண் பகக்களிற்றை மனத்துள் வைப்பாம்.

புயல்—மேகம். பனிவரை—இமயமலை. பிடி—பெண்யானை. வேழம்—யானை (இங்கே ஆண்யானை). பொருப்பு—மலை. வான்—தேவலோகம். 'பொருப்பில் (உள்ள) இயல், வானில் (உள்ள) இயல்' என்பவை, 'மணியில் ஒளி' போல்வது. இல், ஏழாம்வேற்றுமையுருபு. ஒருகோட்டின்—ஒற்றைக் கொம்புடைமையால். இருகோட்டுவெண்பிறை—இரண்டுமுனைகளையுடைய வெண்மையான பிறை(ச்சந்திரன்). செக்கர்வானை மயல்காட்டும் திருமேனி—(காண்போர்) செவ்வானமோவென மயங்கச்செய்கின்ற அழகிய (சிவந்த) உடல். களிறு—ஆண்யானை.

ஞானச்செயல்காட்டும் ஒருகோடு—(விநாயகர் பகவத்கீதையாகிய ஞான நூலடங்கிய பாரதத்தை மேருமலையை ஏடாகவும் தமது இரண்டுகொம்புகளில் ஒன்றை எழுத்தாணியாகவும் கொண்டு எழுதிய) ஞானச் செயல் விளங்கும் ஒரு கொம்பு.

பொருப்பில் வானில் இயல்காட்டும் இருபிடி—மலையில் (பிறந்து, குறத்தியாக வளர்ந்ததனால், அந்த மலையிலிருந்த) இயல்பைத் தெரிவிக்கின்ற பெண்யானை (போன்ற வள்ளியம்மை)யும், தெய்வலோகத்தில் (பிறந்து; தெய்வமகளாக வளர்ந்து அந்த லோகத்தில் வாழ்ந்த) இயல்பைத் தெரிவிக்கின்ற பெண்யானை (போன்ற தெய்வயானையம்மை)யும்.

'முந்நாலுதுதிக்கை' என்பது, (திருக்குற்றாலத்தலபுராண அரும்பதவுரையிற் கூறப்பட்டபடி) பன்னிரண்டு துதிபொருந்தியகை என்ற செம்பொருளில், முருகவேளின் கையைக்குறிப்பது; முன்(னே) நாலு (—தொங்கும்) துதிக்கை (—தும்பிக்கை) என்ற குறிப்புப் பொருளில், யானையின்கையை உணர்த்துவது. ஆதலால், 'முந்நாலுதுதிக்கை' என்று தொடங்கும் வாக்கியத்தை, முருகவேளும் யானையினத்தைச் சேர்ந்தவர் என்பது தோன்றுமாறு அமைத்திருக்கும் கவிசாதுரியம் உற்றுநோக்குவார்க்கு உவகை விளைக்கும்.

திரிபு யமகம் சிலேடைமடக்கு ஆக வரும் சொல்லணிப்பாட்டுக்களில், நகர னகரங்கள் (உருவத்தால் வேறுபடினும் ஒலியால் ஒன்றுபடுவதனால் ஒன்று வருதற்குரிய இடத்தில் மற்றொன்று) வேறுபாடின்றிவருதல் மரபு. 'முருகவெள்ளை' என்று செம்பொருள் கூறப்பெற்ற 'முந்நாலுதுதிக்கை' என்பது, 'யானையின்கை' என்ற குறிப்புப்பொருளுக்கும் பொருத்தமாக, மேற்கூறிய மரபுப்படி 'முன்னாலுதுதிக்கை' எனக் கொள்ளப்பட்டது.

தமிழில், வடமொழிப்பதங்கள் எடுத்தாளப்படுபவைகளிலுள்ள முதலெழுத்தல்லாத நகரங்கள் பெரும்பாலும் னகரங்களாக மாற்றியெழுதப்படுதல் இங்கே கவனித்தற்குரியது.

பொருள்.-இமயமலையின் (அரசனான இமவான் மகளாகப்பிறந்த) பெண்யானை (போன்ற உமாதேவி)யைத் தழுவிச் சிவபெருமானாகிய (ஆண்)யானை, மலையிற்பிறந்து வளர்ந்து அந்த இயல்பைக்காட்டும் (குறமகளான வள்ளியம்மையென்ற) பெண்யானையையும் தேவலோகத்திலே பிறந்து வளர்ந்து அந்தத் தேவலோகத்தின் இயல்பைக்காட்டும் (தெய்வயானையம்மையாகிய) பெண்யானையையும் தழுவுகின்ற முந்நாலு துதிக்கையுடைய குமாரக்கடவுளுக்கு முன்னாகப்பெற்றவரும், (கையில்) ஒரு கொம்புடைமையினால், பிறைச் சந்திரனோடுகூடிய செவ்வானமோவென்று (காண்போரை) மயங்கச் செய்கின்ற (சிவந்த) திருமேனியும் மழைபோல்ஒழுகுகின்ற மதமுமுடையவருமான செண்பகவிநாயகரைச் சிந்தையுள்ளேவை(த்துத் தியானி)ப்போமாக.

முகமட்டும் யானைமுகமாக உள்ள விநாயகரைச் "செண்பகக் களிற்றை" (—ஆண்யானையை) யென்று முழுத்த யானையாக்கி, அவர் தாய் தந்தை தம்பியின்மனைவியர் ஆகியவர்களை உருவகத்தால் யானைகளாகவும் தம்பியைச் சிலேடையால் யானையாகவும் செய்து, இந்நூலாசிரியர் ஒரு பெரிய தெய்வயானைக்குடும்பத்தைச் சிருட்டித்திருக்கும் கற்பனைத்திறமை, வியப்பும் நயப்பும் விளைத்துக் களிப்பை அளிப்பதாயிருக்கிறது.

[தொடரும்].

ஸ்ரீ:

# மதிப்புரை

[திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும் (பழையவுரையுடன்):— சென்னைப் பல்கலைக்கழகத்தின் 15-வது வெளியீடான இதன் பதிப்பாசிரியர்: அப் பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர் ராவ்ஸாஹேப் ஸ்ரீ S. வையாபுரிப்பிள்ளையவர்கள். விலை ரூ 3-4-0. கிடைக்கும் இடம்:— சென்னைப் பல்கலைக்கழகம்.]

இவ்விருநூல்களும், பதினெண்கீழ்க்கணக்கினுள் அடங்கியவை; மக்கள் ஒழுகலாற்றுமுறையிற் கைக்கொள்ளவேண்டிய நீதிநெறிகளைத் தொகுத்துரைப்பவை; பழைய உரையொடுகூடியவை. இவற்றைப் பல ஓலைச்சுவடிகளோடு ஒப்புநோக்கியாராய்ந்து, எழுதியவராலும் இதற்குமுன் பதித்தவர் முதலியோர்களாலும் இவற்றுள் ஏறிய வழுக்கள் பலவும் நீங்க நல்லகாகிதத்தில் விரிந்த ஆராய்ச்சிமுன்னுரையுடன் செப்பமுற அச்சிட்டுதவிய பிள்ளையவர்கள் திறத்துத் தமிழ்மக்கள் நன்றிபாராட்டற்குரியர்.

பதினெண்கீழ்க்கணக்குநூல்கள் இவையென மேற்கோள்கொண்டு நிறுவியும், கீழ்க்கணக்கு என்ற தொடரின் பொருளை ஆராய்ந்தும், பதினெண்கீழ்க்கணக்குநூல்களுள் இவையிவை இன்ன இன்ன காலத்தில் இயற்றப்பெற்றிருக்கலாமென்று சான்றுகளால் ஊகித்து, அவற்றைக் காலமுறைப்படி அமைத்துக்காட்டமுயன்றும், நுவல்பொருள்பற்றிப் பதினெண்கீழ்க்கணக்குநூல்களை வகுத்துக்காட்டியும், திரிகடுகம் சிறுபஞ்சமூலம் என்பவற்றின் பொருளும் அவை நூற்பெயராமாறும் அவற்றின் பொருளமைதியும் அவற்றை இயற்றியுதவிய புலவர்களின் பெயர். காலம் சமயம் முதலியனவும் விளங்க விரித்தும், பதினெண்கீழ்க்கணக்கினு. ளடங்கிய பிறநூல்களிற்பயின்ற கருத்துக்களும் சொற்களும் சொற்றொடர்களும் பிறவுமாகத் திரிகடுகத்திலும் சிறுபஞ்சமூலத்திலும் கண்ட பகுதிகளை எடுத்துக்காட்டியும் ஆராய்ச்சிமுறையில் விரித்து எழுதப்பட்ட முன்னுரை இப்பதிப்புக்கு அணியாய்த்திகழ்வதன்றியும், கற்பார்க்குப் பல அரியசெய்திகளை உணர்த்துவதாயும், ஆராய்ச்சியாளர்களைப் பல முடிபுகள்பற்றி மேலும் ஆராயத்தூண்டுவதாயும் உள்ளது.

இவ்வாறு சிறந்த முறையிற் பலநூல்களைத் தக்கவர்களால் வெளியிடுவித்துச் சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ்வளர்ச்சிக்கு உதவிபுரிந்து நீடு நிலவுக.

# பண்டைத்தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

(ரு அ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழர் ஆரியருக்குக் கொடுத்தவை.

கிறிஸ்தவாப்தத்தை அண்டியகாலங்களில் முன்போலவும் இன்னும் அதிகமாகவும் மேல்நாட்டோடு தமிழர்கொண்டிருந்த வியாபாரப் போக்குவரத்தையும் சாவகம் முதலிய கீழ்நாடுகளோடுகொண்ட தொடர்பையும்* சுட்டி இங்கே பேசுவது நமதுகருத்தல்ல. தமிழரின் ஆதிவரலாற்றையே நாம் ஆராய்கின்ருேம்; ஆதலால், இனி அன்னேர் இடைக்காலத்தில்வந்து புகுந்துகொண்ட ஆரியரோடு கலப்புண்டகாலையில், புயவலியால் தங்களை வென்ற ஆரியரை மனவலியால் எவ்வாறு வென்று அவர்கள் மேல்நிலையை அடையப்பண்ணினர்கள் எனப் பார்ப்போம்.

ஆரியர் தொடக்கத்திற் சிறிது ஏராண்மையுடையோராயிருந்தபோதிலும், பெரும்பான்மை மந்தைகளை மேய்த்து அவைகளாற் சீவித்தோராயும் நிலையான வீடு வாசல் இல்லாது இடம்விட்டுப்பெயர்ந்துகொண்டிருந்தோராயுமே தோன்றுகின்றனர். அவர்களுக்குப் பலவளங்களுங்கொண்ட நகாங்கள் இல்லை. தாசர் என்று அவர்கள் இகழ்ந்த தமிழரோ நகரங்களும் கோட்டை எனும் அர்த்தத்தில் புரங்களும் உள்ளோராயிருந்தனர் என அவர்களது இருக்குவேதப்பாடல்கள் காட்டுகின்றன (R V. X. 49 முதலியன). நகரம் கோட்டை எனும் சொற்களும் தமிழருடையன. தமிழரே, பழையநாட்களிற் சுமேரியாவிலே தாங்கள் செய்ததுபோல, இந்தியாவிலே ஏரிகளைக்கட்டிப் பல கால்வாய்கள் வகுத்து ஏராண்மையை விருத்தியாக்கி நகரிகளை நிருமாணித்து வாழ்ந்துவந்தனர். ஆதி ஆரியருக்கு நிலையான பட்டணங்கள் இல்லாதபோதே, உயர்தரமான பயிர்ச்செய்கையையும் சீர்திருந்திய வாழ்க்கைக்குரிய பல கைத்தொழில்களையும் அவர்கள் பயின்றனராகத் தோற்றவில்லை. ஆரியர் என்ற சொல்லினுக்குச் சிலரது கருத்துப்படி ஏருழவர் என்றது பொருளேயாயினும், ஏருக்கு அவர்கள்கொண்ட தனிச்

---

* இவற்றை மேற்சுட்டிய கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரின் நூலில் 18-ம் அதிகாரத்துட் காணலாம்.

சொற்பெயர் ஹலம் எனும் தமிழ்க் "கலப்பை"ப் பெயரே யாயினமை நோக்கத்தக்கது. கலப்பையின் உருவம் ஏலவே மெசொப்பொத்தாமியாவின் சித்திரங்களுட் காணப்படுகிறது. அங்குப்போல இந்தியாவிலே ஆரியர் வருமுன்னும் தமிழருள்ளே கலப்பை வழங்கியமையை அறிஞர் யாவரும் ஒப்புகின்றமையால்* அத்தமிழர் மெசொப்பொத்தாமியாவிலிருந்து புறம் போந்தமையும் இதனால் உறுதிப்படுகின்றது. கலப்பைமட்டுமன்று, லாங்கலம் எனும் ஆரியரது கலப்பையின் வேற்றுருபெயரும் தமிழரின் "உழுங்கல"த்தை நினைவூட்டுகின்றது. உண்மையில் ஆரியர் ஆதியில் உழுது பயிரிட்டோராகக் காணப்பட்டிலர். அவர்கள் யவம் எனும் காட்டுத்தானியத்தைமட்டும் பிசைந்து உண்டவர்கள். உரலையும் அறியாதிருந்து இருக்குவேத காலத்திலேயே தமிழரிடம் உரலோடு அதன் பெயரையும் பெற்றோராகி உரற்கல்லை உலூகலம் என்றனர். உலக்கையை 'மசிகுமது' எனும் அர்த்தமும் உற்பத்தியுமுள்ள முசலம் என்றனர். கோதுமை எனும் சொல் இந்தியாவிலும் பாரசீகத்திலுமுள்ள ஆரியர்களிடத்தில்லாது பிறவிடத்து ஆரியருட்காணப்படாமையால், அதுவும் திராவிடருடையதே என்று சொல்ல வேண்டும்போலும். கோதுமை விளையும் வடஇந்தியப்பாகங்களெல்லாம் திராவிடரின் ஆதிஉறைவிடங்களே என்றதை நாம் மறந்துபோகவொண்ணாது. ஆரியருடைய வ்ருஹி தமிழருடைய அரிசியேயென்பதிற் சந்தேகமில்லை. ஒருவகைநெல் (oriza coarctata) மெசொப்பொத்தாமியாவுக்கும் சிந்து கங்கைப் பள்ளத்தாக்குகளுக்கும் உரியது என்பர் ஆராய்ச்சிவல்லோர். மெசொப்பொத்தாமியாவிலேதானே திராவிடர் நெல்லைப் பயிரிட அறிந்திருந்தார் எனலாம். அன்னோர் தங்கள் ஆதியிருப்பிடத்திலிருந்து பெயர்ந்து கிழக்கே சென்றபோது அவரோடு நெற்செய்கையும் தருக்கி பாரசீகம் இந்தியா என்னுமிடங்களிற் பரவி அப்பாற் சீனாவிலும் அறியப்பட்டதுபோலும்.† தமிழ் "அரிசி"யே இங்கிலீஷ் ஆதிய ஐரோப்பியமொழிகளில் rice ஆதிய உருவந்தாங்கிநிற்பது யாவரும் அறிந்தது. (vruhi=oriza=riz=rice=arros) ஆரியர் ஏராண்மையைத் தமிழரிடத்திலே திருத்தமாய்க் கற்றுக்கொண்டமைக்கு அன்னோர் இவர்களிடம் தண்ணீரிறைக்கும் யந்திரப்பெயரையும் பெற்றமை ஒரு சான்றாகலாம். அறகட்ட (araghattas) எனும் அப்பெயர் இறைகட்டு எனும் தமிழ்ச்சொல்லேயாம். அது ஹிந்தியின்வழியாய்த் தமிழில்மீண்டுவந்து இன்றைக்கு இராட்டினம் எனப்படுகின்றது.

---

*Bulletin of the school of Oriental studies VIII, 418.

† Watt Commercial Products: of India, pp 8?3-5

உணவுப்பொருள்களோடு மருந்துச்சரக்குகளையும் பெரும்பான்மை திராவிடரே ஆரியருக்குக் கொடுத்தனர். இஞ்சி, கொத்துமல்லி ஏலம் முதலான பல மூலாதிகளுக்குத் தமிழ்ப்பெயர்களே, சொற்பிறப்பு நூற் பயிற்சியில்லாதோர் மயங்கும்படியாக, ஸம்ஸ்க்ருதம் போல வழங்கியிருக் கின்றன. சிருங்கவேரத்தில் இஞ்சிவேரும், குஸ்தும்பரீயில் கொத்துமல்லி யும் ஏலாவில் ஏலமும் கரந்துநிற்கின்றன. பலம் (பழம்) மூலம் (முளை) என்ப வைகளும் தமிழ்ச்சொற்களே. இவற்றோடு சந்தனம் (சாந்து), புஷ்பம் (பூ), மாலா (மலர்) ஆதிய அழகுசெய்யும் பொருள்களும் தமிழிலிருந்து பெயர் அடைந்தன. மணி, முத்து, பவளம், கடகம், கங்கணம், வலயம், கேயூரம், மகுடம் முதலான ஆபரணப்பொருள்களும் தமிழே. மயிரைமுடிக்கும் மோடி களையும் ஆரியர் தமிழரிடமிருந்து பெற்றுக்கொண்டதற்குக் குந்தளம், சூடா, ஜடா, தாடிகா இவையும் பிறவும் தமிழ்ச்சொல்லாயிருத்தல் சான்று. எண்ணெய்ச்சொல்லும் தில, தைலம், ஸ்நேகம் என்று தமிழிலிருந்து வந் திருக்கின்றமை ஒரு விநோதம். தில என்பதற்கு எள் என்றது அடியென்பர். ஸ்நேகம், நெய் எனும் தமிழ்ச்சொல்லிலிருந்துவந்தது. இவை ஒரு காலம் ஒன்றாயிருந்த தாய்ப்பாஷையில்நின்று தனித்தனியே திராவிடத்திலும் ஆரியத்திலும் வந்தனவுமாகலாம்.

நாகரிகத்தோடுகூடிய வேறுபல விஷயங்களிலும் ஆரியர் திராவிடரிடம் இரவல்வாங்குவோராயினர். உதாரணமாய் ஊஞ்சல் ஆடும் பொழுது போக்குக்கு முன் ஒரு சொல் கொண்டிராதவர்கள் தமிழாது துலா முன்னும் பின்னும் வீசுவதைக் கண்டு அச்சொல்லிலிருந்து ஊஞ்சலை தோலா, தோலிகா (dola dolika) என்றனர். இவ்வாறே விசிறியை முன் அறியாதவர்கள் தமிழ்ப்பெயராலேயே அதனையும் வ்யஜன என்றனர்.* வீசு எனும் தமிழ்ச் சொல்லிலிருந்தே அன்னோர் அலைக்கும் வீசி என்று பெயரிட்டமையால், கட லோடு தாங்கள் கொண்டிருந்த சம்பந்தம் சிறிதே என்று நாம் முன் சொல் லியதை வலியுறுத்திக்காட்டிவிட்டனர். அதுமட்டோ? ஆரியருடைய லகரீ எனும் சொல் தமிழ் அலையேறு என்பதிலிருந்து வந்தது. தரங்கம் என்பது தமிழ்த் திரை திரங்கம் என்பதின் மரூஉ. இன்னும் இவ்வாறு பல சொற்கள் உள; எமது சொற்பிறப்பு ஒப்பியல் 'தமிழகராதியிற் காண்க. நாகரிக உயர்ச் சிக்குக் கைத்தொழில் இன்றிமையாதது. கைத்தொழிலாலேதான் இந்தியா வின் பழங்குடிகளான தமிழர் மேம்பட்டிருந்தனர். ஆரியர் பழங்குடிகளோடு

---

* Jules Bloch in Bullet of the Sch. of Or. Stud. V, 341

கலந்துகொண்ட அளவில்மாத்திரம் அவர்கள் வசித்தபாகங்களிலே கைத்தொழில் வளர்ச்சிபெற்றது. தமிழர் அக்காலந்தொட்டுச் செம்பு வெள்ளீயம்* பொன் வெள்ளிச் சுரங்கங்களைக் கண்டுபிடித்து உலோகங்களை அகழ்ந்தெடுத்து உருக்கியும் வேலைசெய்தும் வந்திருக்கின்றனர். சிந்துவெளிப் பழநகரங்களுட் காணப்பட்ட பலவகைப்பட்ட ஆபரணாதிகள் இதற்குப் போதிய சாட்சி. அவற்றுள் இருந்த செம்பும் வெள்ளீயமும் கலந்துருக்கிச்செய்த வெண்கலப்பொருள்களும், பொன்னில் மணியில் தந்தத்தில் கொம்பில் சங்கில் கல்லில் சுட்டமண்ணில் அமைத்த சித்திரவகைகளும், அக்காலமே மேல்நாடுகளில் புகழ்படைத்த அவர்களது நிலைமை முதலியனவும் தமிழரின் பழமையான கைத்தொழிற்றிறனை வெளிப்படுத்துகின்றன. இன்றைக்கும் ஆரியர் இத்தொழில்களில் தமிழரை வெல்லமாட்டாதவர்களாயிருக்கின்றனர். எந்த லோகத்தின் கருஞ்சிவப்புநிறத்தைக் குறிப்பாற்காட்டி அதற்கு மிலேச்சமுகம் மிலேச்சாசியம் என்று ஆரியர் பெயரிட்டனரோ அந்தச் செம்பின்பெயரும் தமிழரிடம் வாங்கினதேயாம். செம்பு (சிவந்த உலோகம்) தான் தம்ப என்று சிங்களத்திலும் தாம்ர என்று ஸம்ஸ்க்ருதத்திலும் வந்தது. அது நிற்க. தமிழர் அந்நாட்டொட்டுப் பலதிறப்பட்ட கைத்தொழில்களில் விசேடம்பெற்றிருந்தமையும் வேறிடத்தில் இல்லாதனவாய் அவர்கள் கையாண்டுகொண்டுவந்த தாதுப்பொருள்கள் ஆதியனவுமேதான் அவர்களது பிறதேசவர்த்தகம் பெருகியதற்கு ஒரு சிறந்த ஏதுவாயின. விதம் விதமான கைத்தொழிலாளிகள் அனைவரையும் போஷிப்பதற்கு வேண்டிய உணவுப்பொருள்களும் தமிழருள் அபரிமிதமாய்ப் பயிர்செய்யப்பட்டன. இவ்வாறு வேளாண்மையும் கைத்தொழிலும் ஒன்றற்கொன்று துணையாய்நின்றதனாலன்றோ பண்டைத்தமிழருள் உயர்தரநாகரிகம்விளங்கிய பட்டணங்களும் பல உண்டாயின.

[தொடரும்]

---

* வெள்ளீயம் (tin) எகிப்திலிருந்து இறக்குமதியானது என்பாருமுளர் (Periplus &c p. 78). எங்ஙனமாயினும் சுமேர்-அக்கத்தியரே செம்பும் வெள்ளீயமும் கலந்த வெண்கலத்தைக் கண்டுபிடித்தவர்களாதலால் (Shrader: Pre historic Antiquities of the Aryan peoples, p. 192) தமிழர் ஆதிநாட்களில் அதனை வழங்கியமை அவர்கள் சுமேரியரோடு கொண்டிருந்த தொடர்புக்கு மேலும் ஒரு சாட்சியாகின்றது.